***KALAM – International Journal***
***Faculty of Arts and Culture,***
***South Eastern University of Sri Lanka.***
***14(1), 2021***

# இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை பற்றிய குற்றச்சாட்டுக்கள்: கெகிராவ பிரதேசத்தினை மையப்படுத்திய ஆய்வு

**நபீல் ஸவாஹிர்[1] & பாத்திமா றிஸ்மியா நவ்பர்[2]**
[1]முதுநிலை விரிவுரையாளர், [2]முதுநிலை மாணவி, அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம் - இலங்கை.

Correspondence: nafeel.zawahir@arts.pdn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வானது இலங்கை முஸ்லிம்களின் பெண் ஆடை பற்றிய குற்றச்சாட்டுக்களை மையமாகக் கொண்டது. இலங்கைச் சூழலமைவில் முஸ்லிம் பெண்களின் ஆடையானது முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாதவர்கள் மத்தியில் எவ்வாறான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளது என்பதினைப் பரீசிலிப்பதினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கையில் பெண்களின் ஆடை தொடர்பில் எதிர்ப்புக்களும், குற்றச்சாட்டுக்களும் அதிகரித்த காலப்பகுதியாகவும், நிகாப் தடைசெய்யப்பட்ட காலப்பகுதியுமான உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான 6 மாதங்களினை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது. இதற்கான தரவுகளானது முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, அவதானம் மூலமாகப் பெறப்பட்டன. இம்முதலாம் நிலைத் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இரண்டாம் நிலைத் தரவுகளான குர்ஆன், ஹதீஸ், சஞ்சிகைகள், புத்தகங்கள், இணையங்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் MS Excel மென்பொதி ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. நோக்கம் கருதிய மாதிரியெடுப்பு அடிப்படையில் முஸ்லிம்களும், பௌத்தர்களும் கலந்து வாழும் கெகிராவ பிரதேசத்தினைச் சேர்ந்த முஸ்லிம்கள் 17 பேரும், முஸ்லிமல்லாதவர்கள் 17 பேருமென 34 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அபாயா, நிகாப் பற்றிய அறிவு, மனப்பாங்கு, அவற்றுக்கிடையிலான வித்தியாசம், அணிவது பற்றிய அபிப்பிராயம், அது தொடர்பான சட்ட ரீதியான ஏற்பாடுகள், அவை அணிதல் பற்றிய நிலைப்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. பெண்களின் ஆடை அமைப்பில் அபாயா முஸ்லிம்கள் மத்தியிலோ அல்லது முஸ்லிம் அல்லாதோர் மத்தியிலோ பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் நிகாப் முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாதோர் மத்தியில் விவாதங்களுக்கும், சர்ச்சைகளுக்கும் காரணமாக அமைந்திருக்கின்றது என்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும். முடிவாக இஸ்லாம் தொடர்பான உண்மையான நிலைமையை ஏனையோருக்கு புரிய வைப்பதற்கான கலந்துரையாடல்களை ஏற்படுத்தவும், கலாசார ஆடையை மாற்றியமைப்பதில் நெகிழ்ச்சித் தன்மையை ஏற்படுத்தல், நிற ஆடைக்கான விருப்பத்தை ஏற்படுத்தல் போன்ற பல விதந்துரைகளையும் முன்மொழிகின்றது.

***கலைச்சொற்கள்:*** இலங்கை முஸ்லிம் பெண்கள், ஆடை, அபாயா, நிகாப்

## 1. ஆய்வுப் பின்புலம்

இஸ்லாம் ஒரு பரிபூரண வாழ்க்கைத் திட்டம் என்ற வகையில் மனிதனுக்கான முழு வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. இஸ்லாம் முழு வாழ்வையும் வணக்கமாகவே (இபாதத்) கருதுகின்றது. மனித வாழ்வின் செயற்பாடுகள் அனைத்தும் இறைவனிடம் நன்மையாக மாற்றம் பெற அதற்கான ஒழுங்குகளையும்இ விதிகளையும் இஸ்லாம் வகுத்துக் கொடுத்துள்ளது. எனவே மனிதனுடைய வாழ்வின் அனைத்து நடைமுறைகளையும் இபாதத் எனும் பார்வையில் நோக்குவதுடன்இ ஒவ்வொரு கனப்பொழுதையும் நன்மையாக மாற்றிக்கொள்வதும் மனிதனின்

கட்டாயக் கடமையாக உள்ளது. இந்தவகையில் இஸ்லாமானது ஆடை அணிதலை வணக்கமாகவும், அதற்கான வழிகாட்டல்களையும் சில சட்ட விதிகளையும் வகுத்துள்ளது. இப்பின்புலத்தில் இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை பற்றிய இவ்வாய்வானது கெகிராவப் பிரதேசத்தினை மையமாகக் கொண்டுள்ளது.

ஆகவே, இஸ்லாத்தில் ஆடைக்கலாச்சாரமானது என்றுமே மானுடர்களுக்கு பயனளிப்பதாகவும், மனித பருவ மாற்றங்களிற்கேற்ப பாதுகாப்பினை உறுதிப்படுத்தவல்ல ஆடைக்கொள்கையுமாக உள்ளது. இதனை வலியுறுத்தியே பின்வரும் ஹதீஸ் அமைகின்றது. ''ஓ அஸ்மாவே! ஒரு பெண் பருவமடைந்து விட்டாளேயானால் அவள் மணிக்கரத்தையும், முகத்தையும் தவிர தம் உடலின் எந்தவொரு பாகத்தையும் அந்நிய ஆடவர் முன் திறந்து காட்ட அனுமதி இல்லை'' (ஆதாரம்: அபூதாவூத்). இதனடிப்படையில் இஸ்லாம் பின்வருமாறு கூறுகின்றது. ''மேலும் (நபியே!) மு.ஃமீனான பெண்களிடம் கூறும் அவர்கள் தங்களுடைய பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளட்டும். தங்களது அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும். அதிலிருந்து தாமாக வெளித் தெரிகின்றவற்றைத் தவிர, மேலும் தங்களுடைய மார்புகள் மீது முந்தானைகளைப் போட்டுக் கொள்ளட்டும்'' (அந்நூர்: 31).

இந்த வகையில் பெண்களின் முகம், இருகரம் தவிர்ந்த அனைத்தும் அவ்றத் என்பதனை இஸ்லாம் கூறுகின்றது. இன்னும் இவற்றை மறைக்கச் சொல்லியும், பெண்களின் ஆடை அலங்காரமானது ஆண்களைக் கவரக்கூடிய வகையில் அமையக்கூடாது என்றும், உடல் உறுப்புக்களை வெளிக்காட்டக் கூடிய வகையில் மெல்லியதாக இருக்கக் கூடாது என்றும், ஆண்களின் ஆடைகளை ஒத்ததாக இருக்கக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஹிஜாப் என்பது பாரம்பரியமாக முஸ்லிம் பெண்கள் தங்கள் குடும்பத்திற்கு வெளியே அந்நிய ஆண்களின் முன்னிலையில் அணியும் ஒரு முக்காடு ஆகும். ஹிஜாப் பொது வாழ்வில் உள்ள ஆண்கள் மத்தியில் பெண்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கின்றது. அது ஒரு மனோதத்துவப் பரிமாணத்தை அர்த்தப்படுத்துகின்றது.[1] ஹிஜாப் என்ற அரபு வார்த்தைக்கு திரை, தடுப்பு, மதில் என்று பல பொருள் உண்டு.[2]

இஸ்லாம் மற்றும் முஸ்லிம் உலகக் கலைக்களஞ்சியக் கூற்றின் படி ஹிஜாப் என்பது ஒரு தடுப்பு அல்லது கட்டுப்பாடு. (curtain, barrier, screen, veil, partition) இஸ்லாத்தில் ஹிஜாப் இருபாலாருக்கும் உரியதாகும்.[3] சில இஸ்லாமியச் சட்ட அமைப்புக்களின் வரையரை படி முகம், கைகள் மற்றும் கால் தவிர அனைத்தையும் உள்ளடக்கும் ஆடை ஹிஜாப் ஆகும்.[4] அந்த வகையில் உலக ஹிஜாப் நாள் பெப்ரவரி 1ஆம் திகதி ஆகும். இத்தினத்தை ஆரம்பித்தவர் நஜ்மா கான் ஆகும். இஸ்லாமிய ஆடையானது மரபு ரீதியான ஆடை மற்றும் நவீனத்துவ ஆடை என வரையறுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் ஏற்படுத்தப்பட்டிருந்த திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் இலங்கையிலிருந்து, முஸ்லிம் நாடுகளான மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுக்குச் சென்றவர்களின் மூலம் இலங்கைக்கு அபாயா மற்றும் ஹிஜாப் போன்ற ஆடைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆகவே, அபாயா, நிகாப் தொடர்பான பல்வேறு சர்ச்சைகள் மேற்கினால் முன்வைக்கப்படும் நிலையில் அதன் தாக்கத்தை ஆய்வுப் பிரதேசமான இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளும்

1 - Glasse, Cyril, The New Encyclopaedia of Islam, Altamira press, 2001, P.179-180).

2 - (http://tamil.thehindu.com/opinion/letters/பெண்களுக்கு மட்டும் தானா- ஹிஜாப்/article8178551.ece). 24.04.2021.

3 - Encyclopaedia of Islam and the Muslim World (2003), p.721, New York: Macmillan Reference USA).

4 - Fisher, Mary pat. Living Religions, New Jersey: Pearon Education, 2008.

இன்று எதிர்நோக்கி வருகின்றன. அவ்வாறான சர்ச்சையாக உள்ள அபாயா, நிகாப் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது, ஆண்களை விட பெண்கள் தாழ்ந்த நிலையில் நோக்கப்படுகின்றனர், பெண்கள் சமூகச் செயற்பாடுகளில் வினைத்திறனுடன் ஈடுபட இது தடையாகவுள்ளது, நிகாப் அணியுமாறு இஸ்லாம் சொல்லவில்லை, இலங்கை கலாசாரத்திற்கு இந்த உடை பொருத்தமில்லை, நிகாப் முஸ்லிம் பெண்கள் மீது ஆண்களால் திணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கான காரணங்களையும் அவை தொடர்பான இஸ்லாத்தின் தீர்வினை வழங்குவதையும் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கை சூழலில் அபாயா, நிகாப் முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் மத்தியில் பல்வேறு பிரச்சினைக்கு வழிவகுக்கக் கூடிய ஒன்றாக உள்ளது. இந்நிலை சில காலகட்டங்களாகக் காணப்பட்ட போதிலும், இதன் பாரிய தாக்கம் உயிர்த்த ஞாயிறு அதாவது, 2019.04.21 க்குப் பிறகே வெளிப்படத் தொடங்கியது. அதன் பின்னர் அபாயா, நிகாப் தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன. இந்நிலை முஸ்லிம் முஸ்லிமல்லாதோரிடையே பாரிய சிக்கல்களையும் தோற்றுவித்துள்ளன. எனவே, இவ்வாறான ஒரு பிரச்சினையை மையமாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஆய்வுப் பிரச்சினை

இலங்கை முஸ்லிம் பெண்களின் உடையானது முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் மத்தியில் பிரச்சினைக்கு வழிவகுக்கக் கூடிய ஒன்றாக உள்ளது.

### ஆய்வின் முக்கியத்துவம்

முஸ்லிம்களின் மீதான மேற்கின் ஊடுறுவல், சிந்தனை போக்கு, நாகரீகம் மற்றும் நவீனத்துவம் என்பன ஏற்படுத்தியுள்ள தாக்கங்களினால் இஸ்லாமிய வாழ்வியல் அம்சங்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அத்துடன், இஸ்லாத்தின் எழுச்சியை கண்டு அதனை சிதைக்க மேற்கு இஸ்லாத்தின் மீது பாரிய குற்றச்சாட்டுக்களை சுமத்தி அதன் நற்பெயரைக் கலங்கப்படுத்துகின்றது. இவ்வாறான ஒரு நிலையே இன்று இலங்கையிலும் காணப்படுகின்றது. இவற்றை அடிப்படையாக் கொண்டு இவ்வாய்வின் முக்கியத்துவத்தை எடுத்து நோக்குவோமாயின், இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை பற்றிய முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் மத்தியில் காணப்படும் நிலைமைகளை இனங்காணல், இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான பிரச்சினைகள், அதற்கான காரணங்களை கண்டறிதல், இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பாக முஸ்லிம் முஸ்லிமல்லாதோருக்கு தெளிவுபடுத்தல் என்ற அடிப்படையில் ஆய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

### 2.1 பொது நோக்கம்:

இலங்கை முஸ்லிம் பெண்களின் உடையானது முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் மத்தியில் எவ்வாறான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளன என்பதை பரிசீலித்தல்.

### 2.2 சிறப்புநோக்கங்கள்:

- இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை முஸ்லிம், முஸ்லிமல்லாதோர் மத்தியில் பிரச்சினைக்கு வழிவகுப்பதற்கான காரணங்களை கண்டறிதல்.

- இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் தீர்வினைப் பரிசிலித்தல்.

### *2.3 ஆய்வு வினாக்கள்*

1. *இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடையானது முஸ்லிம், முஸ்லிமல்லாதோர் மத்தியில் எவ்வாறான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளது?*
2. *இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடையானது முஸ்லிம், முஸ்லிமல்லாதோர் மத்தியில் பிரச்சினைக்கு வழிவகுப்பதற்கான காரணங்கள் யாவை?*
3. *இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் தீர்வு என்ன?*

### *3. இலக்கிய மீளாய்வு*

எந்தவொரு ஆய்வினை மேற்கொண்டாலும் ஆய்வுடன் தொடர்புடைய முன்பு வெளிவந்த ஆய்வுகள் பற்றி ஆராய்வது மிக அவசியமானது. ஆய்வினைச் சிறப்பாக நடாத்திச் செல்லவும், எண்ணக்கரு சட்டகமொன்றை (conceptual framework) உருவாக்கவும் மற்றும் ஆய்வுக்கான பல தகவல்களைப் பெறவும் இலக்கிய மீளாய்வு உதவுகின்றது.

ஜெஸீல்,எம்.ஜ.எம், மற்றும் ஏனையோர், *(2018)* என்பவர்களின் ஆய்வுக் கட்டுரையான "இஸ்லாமிய ஆடைக் கலாச்சாரமும் முஸ்லிம் இளம் பெண்களின் இன்றைய நிலையும்: அக்கரைப்பற்று மாநகரசபையினை மையப்படுத்திய ஆய்வு" என்பதில் அபாயா, நிகாப் எங்கிருந்து தோற்றம் பெற்றது, அது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட முறை, இஸ்லாம் ஆடை பற்றி என்ன குறிப்பிட்டுள்ளது என்பவை பற்றியும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள பெண்களின் ஹிஜாப் தொடர்பான ஆய்வாக அமையப்பெற்றுள்ளது. ஆனால், இலங்கையில் முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பற்றி இவ்வாய்வில் பேசப்படவில்லை. இது ஆய்வின் இடைவெளியாகக் காணப்படுகின்றது. இவ்விடைவெளியை இவ்வாய்வு நிறைவுச்செய்யும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றது.

Nasrin Akter Chowdhury, (2017) என்பவரின் "Probing Niqab wearing as an Islamic Identity, Cultural piety and Women's Empowerment: A phenomenological Approach" என்பவரின் ஆய்வுக்கட்டுரையில் இஸ்லாமிய ஆடைத் தொடர்பான அறிமுகம், நிகாப் இஸ்லாமிய ஆடையமைப்பில் ஒரு பகுதி என்பதை விளக்கப்படுத்தியுள்ளது. அடுத்த பகுதியாக நிகாப் அணிவதால் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து எழுகின்ற சர்ச்சைகள் தொடர்பாகவும் மற்றும் நிகாப் தொடர்பாக ஷெய்க் முஹம்மத் ஸெய்த் தன்தாவி "The niqab is a tradition it has no connection with religion" என நிகாப் தொடர்பாகக் குறிப்பிடுகின்ற முக்கிய கருத்துக்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எனினும் இலங்கை பற்றிய விடயங்கள், இலங்கையில் முஸ்லிம் பெண்களின் உடை தொடர்பான சர்ச்சைகள் இவ்வாய்வில் முன்வைக்கப்படாமை இவ்வாய்வின் இடைவெளியாகக் காணப்படுகிறது.

Faegheh Shirazi and Smeeta Mishra ஆகியோரின் "Young Muslim Women on the Face Veil (Niqab): A tool of resistance in Europe but rejected in the United States. என்ற ஆய்வுக்கட்டுரையில் ஐரோப்பிய நாடுகளில் நிகாப் அணிவதற்கான எதிர்ப்பு, ஐக்கிய அமெரிக்காவில் நிகாப் அணிவதற்கு நிராகரிப்பு பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் நிகாப் தனிப்பட்ட தேவைக்கும், அரசியல் காரணிகளுக்காகவும், மத அடையாளத்திற்காகவுமே பயன்படுத்துவதாகவும் ஐக்கிய அமெரிக்கவில் நிகாப் என்பது தேவையற்ற ஒன்று என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால் இவ்வாய்வு மேற்குலகில் நிகாப்பின் அமைப்பு, நிலைப்பற்றி மட்டுமே பேசுகின்றது. அவ்வகையில் இலங்கையில் பெண்களின் ஆடை தொடர்பான இடைவெளியொன்று காணப்படுகின்றது. எனவே இவ்விடைவெளியை இவ்வாய்வு நிறைவுச்செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அல்கர்ளாவி யூசுப் (2000), என்பவரது "அந்நிகாப் லில்மர்ஆ பைனல் கௌலி பிபிதஇய்யதிஹி வல்கொளலி பிவுஜூபிஹி" (பித்அத் என்று சொல்பவர்களுக்கும் வாஜிப் என்று சொல்பவர்களுக்கும் மத்தியில் பெண்ணின் முகத்திரை) என்ற ஆய்வில் முஸ்லிம் பெண்களின் நிகாப் என்னும் முகத்திரை தொடர்பில் அரபு இஸ்லாமிய உலகில் முஸ்லிம் அறிஞர்கள் மத்தியில் நிலவும் இருவேறு அபிப்ராயங்களான, முகத்திரை இஸ்லாத்தில் வலிந்து உள்நுழைவிக்கப்பட்ட ஒரு பித்அத் மற்றும் முகத்திரை இஸ்லாமிய சட்டமரபில் வாஜிபான ஒரு செயற்பாடு ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதே பிரதான நோக்கமாக இருக்கிறது. அதனடிப்படையில் முகத்திரை இஸ்லாமிய சட்ட மரபுக்கு உற்பட்ட ஒரு செயற்பாடு என்றும் ஆனால் அது மார்க்கத்தில் கட்டாயமாக்கப்படவில்லை என்றும் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை நியாயப்படுத்தும் வகையில் மாத்திரமே முகத்திரை அணிவதால் ஏற்படும் சமூக சிக்கல்கள் மற்றும் மேற்கின் விமர்சனங்கள் என்பன முன்வைக்கப்படுகின்றன. நவதேசியவாத குற்றச் சாட்டுக்களுக்களை மையப்படுத்தி இவ்வாய்வு அமையவில்லை. அந்தவகையில் முகத்திரை குறித்த குற்றச் சாட்டுக்கள், காரணங்கள், தீர்வுகள் என்பன ஆய்வு இடைவெளியாக இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

மன்சூர் எம்.ஏ.எம், (2014), என்பவரது "பெண்ணின் சமூக வாழ்வும் உடையும்" என்ற ஆய்வு, இலங்கையில் இஸ்லாம் பற்றிய குற்றச் சாட்டுக்கள் குறிப்பாக பெண்களின் சமூக வாழ்வை மையப்படுத்தி எழுந்த போது, அதனையொட்டி முஸ்லிம் சமூகத்தில் எழுந்த வாதப்பிரதிவாதங்களுக்குப் பதில் தரும் வகையில், இலங்கையின் பல்லின வாழ்வமைப்புக்குப் பொறுத்தமான தீர்வை முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் பெண்ணின் சமூகப் பாத்திரம் ஆணின் சமூகப் பாத்திரத்திற்கு எந்தவகையிலும் இரண்டாம் பட்சமானது அல்ல என்றும் பெண்ணின் ஆடை குறிப்பிட்டதொரு வடிவம் மற்றும் நிறத்தால் வரையறுக்கப்பட்டதல்ல என்றும் முகத்திரை கட்டாயமானதல்ல அதுவே பல்லின சமூக வாழ்வுக்கு மிகவும் பொறுத்தமானது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் குறிப்பாக பெண்களின் ஆடை தொடர்பான குற்றச் சாட்டுக்கள் மற்றும் காரணங்களில் இவ்வாய்வு பெரிதும் கவனம் செலுத்தவில்லை. அந்தவகையில் இப்பகுதி ஆய்வு இடைவெளியாகக் காணப்படுகின்றது.

## 4. ஆய்வு முறையியல்

### 4.1 ஆய்வுப்பிரதேசமும் மாதிரியும்:

ஆய்வுப் பிரதேசமான கெகிராவ இலங்கையின் நிலப்பரப்பு ரீதியாக மிகப்பெரிய மாகாணமான வட மத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது. மேலும் கெகிராவ பிரதேசமானது 226.5922 sq mi (586.8711 $km^2$) சதுர கிலோமீட்டரை அடர்த்தியாக கொண்டிருப்பதுடன், நில வளமாக 149.7620 sq mi பரப்பைப் கொண்டிருப்பதுடன், நீர் வளமாக 58.4915 sq mi (151.4922 $km^2$) பரப்பைக் கொண்டிருப்பதுடன், பொருளாதார ரீதியாக பெரும்பான்மையினர் விவசாயிகளாகவும் உள்ளனர். மேலும் மத ரீதியாக பௌத்த மத்ததினையும் பின்பற்றுபவர்களாக உள்ளனர். அந்த வகையில் ஆய்வின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவான கெகிராவ 628ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவானது மொத்த சனத்தொகையாக 1472 பேரினையும், அதில் 280 பௌத்தர்களையும், 738 முஸ்லிம்களினையும், 454 தமிழர்களையும் சனத்தொகையாகக் கொண்டிருக்கின்றது (மூலம்: திட்டமிடல் கிளை கெகிராவ பிரதேச செயலகம், 2020 மற்றும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.).

மேலும் கெகிராவ 628 கிராம சேவகர் பிரிவினை மையமாகக் கொண்டு நோக்கம் கருதிய மாதிரியெடுப்பின் அடிப்படையில் முஸ்லிம்கள் 17 பேரும், முஸ்லிம் அல்லாத 17 பேருமென 34 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டதுடன், ஒப்பீட்டுப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. முஸ்லிம்களில் 17 பேரும், முஸ்லிம் அல்லாத 17 பேராக இப்பிரதேசத்தின் அதிக சனத்தொகையைக் கொண்டவர்களாகவும், ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான ஆடைத்தொடர்பில் அதிக தப்பபிப்பிராயம் கொண்டவர்களாக பௌத்த சமயத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் ஆய்வுப்பிரதேசத்தின் மாற்றுமதத்தவர்களின் கருத்தறியும்

பொருட்டு பெருன்மையான பௌத்தர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டமை, 628 கிராம சேவகர் பிரிவினை மையமாக கொண்டிருக்கின்றமை என்பன மாதிரி சார்ந்த ஆய்வின் மட்டுப்பாடு (Research Limitation) ஆகும்.

### 4.2 ஆய்வின் வடிவமைப்பும், தரவு சேகரிப்பு கருவிகளும்

சமூக விஞ்ஞான ஆய்வுகளில் அளவு சார் தரவுகள் மற்றும் பண்பு சார் தரவுகள் பயன்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் "இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை பற்றிய குற்றச்சாட்டுக்கள்" என்ற இவ்ஆய்வில் பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வு நுட்பங்களை இணைத்து கலப்பு முறை (Mixed method) பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, அவதானம் மூலமாகப் பெறப்பட்டன. இம்முதலாம் நிலைத் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இரண்டாம் நிலைத் தரவுகளான குர்ஆன், ஹதீஸ், சஞ்சிகைகள், புத்தகங்கள், இணையத்தளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டன.

### 4.3 தரவுப் பகுப்பாய்வு

அட்டவணைகள், வரைபுகள், விளக்கப்படங்கள் என்பவற்றினை விளக்கும் வகையில் விவரணப்புள்ளிவிபரப் பகுப்பாய்வு முறைக்குட்படுத்தப்பட்டுப் பகுப்பாய்வுச் செய்யப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது. இந்தவகையில் பண்பு ரீதியாக தகவல்களைக் கருப்பொருள் பகுப்பாய்வு அடிப்படையிலும் (Thematic Analysis), புள்ளிவிபரத்தரவுகளினைப் (MS excel) பயன்படுத்தியும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### 4.4 ஆய்வுக்காலப்பகுதி


இலங்கையில் வெகுகாலமாக முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பில் எதிர்ப்புகளும் குற்றச்சாட்டுக்களும் இருந்துக்கொண்டே வந்துள்ளன. இந்நிலையில் இலங்கையில் சில நாட்கள் அபாயா, நிகாப் அணிவது சட்டரீதியாக தடை செய்யப்பட்டிருந்தது. தற்போது அத்தடை நீக்கப்பட்டுள்ளது. என்ற வகையில், அபாயா தடைசெய்யப்பட்ட காலப்பகுதியான உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான 6 மாதங்களை மையமாகக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

## 5. கண்டறிதல்களும் கலந்துரையாடல்களும்

அபாயா, நிகாப் தொடர்பாக முஸ்லிம்களிடமிருந்து பெறப்பட்ட வினாக்கொத்தில் இருந்து பெற்ற தகவல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கென தெரிவு செய்யப்பட்ட இலங்கையிலுள்ள இஸ்லாமிய இயக்கத்தவர்களின் உறுப்பினர்கள், கல்விமான்கள் மற்றும் சமூகநலன் விரும்பிகள் போன்றோரையும் முஸ்லிம் அல்லாதோரையும் உள்ளடக்கி பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபடங்கள் போன்றவற்றின் உதவியுடன் விளக்கப்பட்டுள்ளது.

### 5.1 பதிலளித்தவர் தொடர்பானது

*வரைபு 1: பதிலளித்தவர் தொடர்பானது*




*(மூலம்: வினாக்கொத்து, 2019)*

ஆய்வுக்கு பதிலளித்தவர்கள் சமய அடிப்படையில் வேறுபாட்டினை மேற்படி வரைபு குறிப்பிட்டு நிற்கின்றது. அந்த அடிப்படையில் 50% முஸ்லிம்களிடம் இருந்தும், 50% முஸ்லிமல்லாதவர்களிடமிருந்தும் தகவல்கள் பெறப்பட்டன. மேற்படி முஸ்லிம் அல்லாதாவர்கள் பௌத்த சமயத்தினை சார்ந்தவர்களாக உள்ளனர்.

**அட்டவணை 1 – வினாக்கொத்து வழங்கப்பட்ட முறை**

| **இனம்** | **வழங்கப்பட்ட வினாக்கொத்தின் எண்ணிக்கை N=34** | **வீதம் 100%** |
|---|---|---|
| முஸ்லிம் | 17 | 50% |
| முஸ்லிம் அல்லாதோர் | 17 | 50% |
| மொத்தம் | 34 | 100% |


(மூலம்: வினாக்கொத்து, 2019)

**அட்டவணை 2: முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர்களிடம் கேட்கப்பட்ட வினாக்கள் தொடர்பானது.**

| **வினவப்பட்ட வினா தொடர்பான விடயம்** | **ஆம்** | | **இல்லை** | |
|---|---|---|---|---|
| | **K** | **K.m** | **K** | **K.m** |
| 1. அபாயா, நிகாப் பற்றி தெரியுமா? | 100% | 81% | - | 19% |
| 2. அபாயா, நிகாப் இரண்டிற்குமிடையிலான வித்தியாசம் தெரியுமா? | 100% | 30% | - | 70% |
| 3. அபாயா அணிய சட்டத்தில் ஏற்பாடு உள்ளதா? | 65% | 42% | 35% | 58% |

(மூலம்: வினாக்கொத்து, 2019)

ஆய்வின் கண்டுபிடிப்புக்களின் படி அட்டவணை-2 மற்றும் வரைபு 2 தரவுகளின் அடிப்படையில் அபாயா, நிகாப் பற்றி அனைத்து முஸ்லிம்களும் தெரிந்திருப்பது போன்றே, முஸ்லிம் அல்லாதோரும் அறிந்துள்ளனர். அவற்றுக்கு இடையிலான வித்தியாசத்தில் முஸ்லிம் அல்லாதோர் 60% தெரியாதவர்களாக இருப்பது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இருப்பினும் அபாயா அணிய சட்டத்தில் இடமுள்ளதா? என்பதற்கு 65% வீதமான முஸ்லிம்கள் மட்டுமே அறிந்துள்ளனர். 35% முஸ்லிம்கள் அது தொடர்பான அறிவு இல்லாதவர்கவே காணப்படுகின்றனர்.




(மூலம்: வினாக்கொத்து, 2019)

### 5.3 இரு இனத்தவர்களிடமும் கேட்கப்பட்ட வினாக்கள்

அதே போன்று அட்டவணை- 3 இன்படி நிகாப் அணிய சட்டத்தில் ஏற்பாடு உண்டு என பெரும்பான்மை முஸ்லிம்கள்கள் தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளனர். இருப்பினும் சட்டத்தில் இடம் இருக்கிறதா? இல்லையா? என்பது தெரியாத நிலையிலும் 35% முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். அதே போன்று இலங்கை நாட்டில் நிகாப் அணிவது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என 40% முஸ்லிம்கள் கருத்து தெரிவித்துள்ள அதேவேளை 89% முஸ்லிம் அல்லாதோரும் இக்கருத்தை முன்வைத்துள்ளனர்.

**அட்டவணை 3**

| வினவப்பட்ட வினா தொடர்பான விடயம் | ஆம் | | இல்லை | | தெரியாது | |
|---|---|---|---|---|---|---|
| | K | K.m | K | K.m | K | K.m |
| 1. நிகாப் அணிய சட்டத்தில் ஏற்பாடு உண்டா? | 59% | 48% | 6% | 36% | 35% | 16% |
| 2. இது முஸ்லிம்களின் கலாசார ஆடையா? | 76% | 55% | 24% | 41% | - | 4% |
| 3. முஸ்லிமல்லாதோரின் சுதந்திரத்திற்கு இவ்வாடை தடையா? | - | 73% | 94% | 24% | 6% | 3% |
| 4. தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் | 40% | 89% | 60% | 9% | - | 2% |

(மூலம்: வினாக்கொத்து, 2019)


**அட்டவணை 4: அபாயா, நிகாப் மனப்பாங்கு பற்றி கேட்கப்பட்ட வினாக்கள்**

| வினவப்பட்ட வினா தொடர்பான விடயம் | ஆம் | | இல்லை | |
|---|---|---|---|---|
| | K | K.m | K | K.m |
| 1. அபாயா முஸ்லிம் பெண்களை தாழ்த்துகிறதா? | - | 89% | 100% | 11% |
| 1. நிகாப் முஸ்லிம் பெண்களை தாழ்த்துவதாக உள்ளது என நீர் கருதுகின்றீரா? | 12% | 90% | 88% | 10% |
| 2. அபாயா இலங்கை கலாசாரத்திற்கு பொருத்தமானதா? | 65% | 8% | 35% | 92% |
| 3. நிகாப் இலங்கை கலாசாரத்திற்கு பொருத்தமானதா? | 29% | 5% | 71% | 95% |
| 4. கருப்பு நிற அபாயாஇ நிகாப் என்பன இந்நாட்டிற்கு பொருத்தமெனக் கருதுகின்றீர்களா? | 47% | 2% | 53% | 98% |

(மூலம்: வினாக்கொத்து, 2019)

அட்டவணை- 4 மற்றும் வரைபு 3 இன்படி அபாயா, நிகாப் முஸ்லிம் பெண்களை தாழ்த்துவதாக முஸ்லிம் அல்லாதோர் தெரிவித்துள்ளனர். அதே போன்று இலங்கை கலாசாரத்திற்கும் இவ்வாடை பொருத்தமானதல்ல என்பதையும் தெரிவித்துள்ளனர். கருப்பு நிற அபாயாவும் பொருத்தமற்றது என்றும் 53% முஸ்லிம்களே கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வரைபு 03**




(மூலம்: வினாக்கொத்து, 2019)

மேற்குறிப்பிட்ட தரவுகளின் படி அபாயா, நிகாப் முஸ்லிம் பெண்களை தாழ்த்துகிறதா? என்ற

வினாவிற்கு பதிலளித்த முஸ்லிம்களில் அனைவரும் அபாயா அவ்வாறு தாழ்த்துவதில்லை என்றும், நிகாப் தாழ்த்துகிறது என 12% முஸ்லிம்களும் கருதுகின்றனர். எனவே முஸ்லிம்களுக்குள்ளேயே நிகாப் தொடர்பில் சில வாதங்கள் காணப்படுவதை முடிவுகள் வெளிக்கொணர்கின்றன. மேலும் அபாயா இலங்கை கலாசாரத்திற்கு பொருத்தமானதா? என்பதற்கு 65% ஆம் என்று கூற நிகாப் இலங்கை கலாசாரத்திற்குப் பொருத்தமில்லை என 71% பெரும்பான்மை முஸ்லிம்கள் தங்கள் கருத்தை தெரிவித்துள்ளனர்.

**அட்டவணை 5: நிகாப், அபாயா அணிவதால் எதிர்கொண்ட சவால்கள் பற்றிக் கேட்கப்பட்ட வினாக்கள்**

| வினவப்பட்ட வினா தொடர்பான விடயம் | அடிக்கடி | ஓரளவு | ஒருபோதும் இல்லை |
|---|---|---|---|
| நிகாப் அணிந்ததற்காக பயங்கரவாதியாகப் பார்க்கப்படல் | 54% | 22% | 24% |
| அபாயா அணிந்ததற்காக பயங்கரவாதியாகப் பார்க்கப்படல் | 10% | 24% | 66% |
| நிகாப் காரணமாக பொது இடத்தில், நிறுவனமொன்றில் ஒதுக்கப்படல் | 39% | 41% | 20% |
| அபாயா காரணமாக பொது இடத்தில், நிறுவனமொன்றில் ஒதுக்கப்படல் | 4% | 12% | 84% |
| நிகாப் அணிந்ததால் உடல் ரீதியான தொந்தரவுக்கு உட்பட்டீரா? | - | 5% | 95% |
| அபாயா அணிந்ததால் உடல் ரீதியான தொந்தரவுக்கு உட்பட்டீரா? | - | - | 100% |
| நிகாப் வாய் மூலமான ஒதுக்குதல், அவமானத்திற்கு உட்படல் | 23% | 51% | 26% |
| அபாயா வாய் மூலமான ஒதுக்குதல், அவமானத்திற்கு உட்படல் | 10% | 10% | 80% |

(மூலம்: வினாக்கொத்து, 2019)

அட்டவணை 5 இன் படி, முஸ்லிம் பெண்கள் அபாயா, நிகாப் அணிந்து செல்லுகின்ற போது பொதுவாக ஏனையோரால் தொந்தரவுக்கு உற்படுத்தப்படுகின்றார்களா? என கேட்கப்பட்ட வினாவிற்கு பெரும்பாலும் இல்லை என்ற பதில் கிடைக்கப் பெற்றாலும், நிகாப் அணிந்து செல்வதால் வன்முறையாளர்களாகவும், பயங்கரவாதியாகவும் பார்க்கப்படுகின்றமையை வரைபின் மூலம் அவதானிக்க முடிகிறது. அதாவது 54% அவ்வாறு முஸ்லிம் பெண்கள் பார்க்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தனர். இந்த நிலை அபாயா அணிந்து செல்லும் போது இடம் பெறுவதில்லை. ஒரு நிறுவனத்தில் அல்லது பொது இடங்களில் ஒதுக்கப்படும் நிலை ஓரளவில் காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. இதுவும் நிகாப் அணிந்து செல்லும் போதே ஆகும். அதே நேரம் அபாயாவிற்கு இந்நிலை இல்லை எனவும் அதே போன்று வாய் மூலமான ஒதுக்கல்களுக்கும் சிறிதேனும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.


**அட்டவணை 6: நிகாப், அபாயா அணிவதால் இனங்களுக்கு இடையில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி கேட்கப்பட்ட வினாக்கள்**

| வினவப்பட்ட வினா தொடர்பான விடயம் | ஆம் | இல்லை | தெரியாது |
|---|---|---|---|
| நிகாப் அணிவதால் இனங்களுக்கிடையே பிரச்சினை ஏற்படுமா? | 54% | 46% | - |
| அபாயா அணிவதால் இனங்களுக்கிடையே பிரச்சினை ஏற்படுமா? | 30% | 59% | 11% |
| அபாயா அணிவதால் பெண்களுக்கு சுய கட்டுப்பாடு, பாதுகாப்பு என கருதுகிறீரா? | 76% | 14% | 10% |

(மூலம்: வினாக்கொத்து, 2019).

*அட்டவணை 6 மற்றும் வரைபு 4இன் படி அபாயா அணிவதால் இனங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படுகிறதா? என கேட்கப்பட்டபோது 59% ஆனவர்கள் இல்லை என்றும் 30% ஆனவர்கள் ஆம் என்றும் பதிலளித்துள்ளனர். நிகாப் அணிவதால் இனங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படுகிறதா? என்பதற்கு ஆமென 54% ஆனவர்களும், இல்லை என 46% ஆனவர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். இதிலும் நிகாப் ஒரு சர்ச்சையாகவே காணப்படுகிறது. அபாயா பெண்களுக்கு சுய கட்டுப்பாடு, பாதுகாப்பு என கருதுகிறீர்களா? என வினவப்பட்ட போது, ஆம் என்றே அதிகமானர்கள் குறிப்பிட்டுள்ளனர்.*

***வரைபு 4***




*(மூலம்: வினாக்கொத்து, 2019).*

*அபாயா அணிவதால் இனங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படுகிறதா என கேட்கப்பட்டபோது 59% ஆனவர்கள் முஸ்லிம்களும், 52% முஸ்லிம் அல்லாதோரும் இல்லையென கூறியுள்ளனர். நிகாப் அணிவதால் இனங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படுகிறதா என்றால் ஆம் என்றே இரு தரப்பினரும் கருத்து தெரிவித்துள்ளனர். எனவே, நிகாப் ஒரு சர்ச்சையாகவே காணப்படுகிறது. அபாயா பெண்களுக்கு சுய கட்டுப்பாடு, பாதுகாப்பு என கருதுகிறீர்களா என வினவப்பட்ட போது, ஆம் என்றே பெரும்பான்மை முஸ்லிம்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் முஸ்லிம் அல்லாதோர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.*

## ***முடிவுரை***

*இலங்கை முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பாக ஆய்வுக்குட்படுத்தியதில் அபாயா, நிகாப் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை அறியாத சில முஸ்லிம்களும் முஸ்லிமல்லாத பலரும் காணப்படுவதை அவதானிக்கலாம். அபாயாவை விட நிகாப் அணிவதினாலேயே பல்வேறு பிரச்சினைகளுக்கு முஸ்லிம் பெண்கள் முகம் கொடுக்கின்றனர். இவ் ஆடை இலங்கை கலாசாரத்திற்குப் பொருத்தமற்றது என்று குறிப்பிடுகின்றனர். நிகாப் அணிவதால் நிறுவனங்களிலும். பொது இடங்களிலும் ஒதுக்கப்படல், முஸ்லிம்கள் வன்முறையாளர்களாகவும், பயங்கரவாதிகளாகவும் பார்க்கப்படல் போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆய்வானது முஸ்லிம் ஆடை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பின்வரும் பரிந்துரைகளை முன்மொழிகிறது.*

- *இஸ்லாமிய ஆடை என்பது வெறும் கலாச்சாரத்தை மாத்திரம் பிரதி பலிக்கும் விடயமல்ல மாறாக மதம், கலாச்சாரம் ஆகிய இரண்டையும் சேர்ந்த விடயமாகும். அந்த வகையில் ஆடையின் கலாச்சாரம் சார்ந்த பகுதியை நாம் வாழும் சூழலுக்கு ஏற்ப மாற்றிக்கொள்வதுடன், சூழ்நிலைகளுக்கு ஏற்ப இஸ்லாமிய வரையறையுடன், ஆடைகளை அணிதல் வேண்டும்.*

- ஆடையின் பொதுவான நோக்கமான அடையாளப்படுத்தல் என்பது அவரவர் நாடு, சூழலுக்கு ஏற்ப மாறுபடலாம், தவறில்லை என்ற வகையில் அதனை இலங்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கடைப்பிடித்தல் வேண்டும்.
- பெண்களின் முகத்திரை (நிகாப்) நாட்டின் பாதுகாப்புக்கோ, அமைதி இன்மைகோ அது அச்சுறுத்தலாக அமையுமெனில் அதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- நாட்டின் சகவாழ்வு, சமாதானம் மத ஒற்றுமை மேலோங்க, ஒரே குடையின் கீழ் எல்லோரும் ஒன்று சேர எல்லோரும் முயற்சிக்க வேண்டும், அந்த வகையில் பெண்கள் கருப்பு நிற ஆடையை முடிந்த அளவு தவிர்த்து வேறு நிற ஆடை வகைகளை தேர்தேடுக்க முயற்சிக்க வேண்டும்.
- இஸ்லாமிய கலாச்சாரதை ஒரு போதிலும் பாதிக்காத அபாயா தவிர்ந்த வேறு வகையான ஆடைகளை தேர்வதற்கு ஊக்குவித்தல் வேண்டும்.
- சமூக நலனை கருத்தில் கொண்டு ஆடை விடயத்தில் அன்னிய சமூகத்தின் உள்ளங்களை கவரும் விதத்திலும், இஸ்லாமிய சட்ட வரம்பை மீறாத வகையில் ஆடைகளை அமைத்துக்கொள்ளல்.
- இலங்கை வாழ் முஸ்லிம் கல்விமான்கள், மற்றும் உயர் குழுக்கள் முஸ்லிம் பெண்களின் ஆடை விடயத்தில் அதி கூடிய கரிசனைக் காட்டி முன்மாதிரியான ஆடை வகைகளை அறிமுகப்படுத்தல்.
- முஸ்லிம் பெண்களின் ஆடை சார்ந்த குற்றச்சாட்டுக்களை நீக்கும் பொருட்டு கிராமிய, பிரதேச, மாவட்ட, பிராந்திய மற்றும் தேசிய ரீதியில் கருத்தரங்குகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.

போன்ற பல பரிந்துரைகளை ஆய்வானது முன்மொழிகின்றது.

***உசாத்துணைகள்***

Encyclopedia of Islam and the Muslim World. (2003). p.721, New York: Macmillan Reference USA.

Shirazi F. and Mishra S., (2010). "*Young Muslim Women on the Face Veil (Niqab): A tool of resistance in Europe but rejected in the United States*, International Journal of Cultural Studies. Vol, 13, Issue,1, pp43-62. from https://scholar.google.com/citationps?user=-RVDCYoAAAAJ&hl=th, Retrieved on 2020 06 01.

Fisher, Mary pat., (2008). Living Religions, New Jersey: Pearon Education.

Jazeel J.M., (2018). "இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரமும் முஸ்லிம் இளம் பெண்களின் இன்றைய நிலையும்: அக்கரைப்பற்று மாநகரசபையினை மையப்படுத்திய ஆய்வு" 5th International Symposium. 29 November 2018. Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka, pp. 124-129. [Online] available http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3444.

Glasse Cyril., (2001). The New Encyclopedia of Islam, Altamira press,2001,P.179-180) ஹிஜாப்

Mohamed Ali S., (2011). Hijab and Family life. *Ahlul bayt world Assembly,* vol:11(4), 138-263.

Nasrin Akter Chowdhury, (2017). "Probing Niqab wearing as an Islamic Identity, Cultural piety and Women's Empowerment: A phenomenological Approach".

Stacey A., (2012). *The Islamic Dress Code.* America: New Muslim E Learning site.

Rashid Diwan A., (2004). *The Beauty of Islamic Dress*. New Delhi: Adam publishers & Distributors.

அல்கர்ளாவி யூசுப், *(2000)*, அந்நிகாப் லில்மர்ஆ பைனல் கௌலி பிபிதஇய்யதிஹி வல்கொளலி பிவுஜூபிஹி, பெய்ரூத், முஅஸ்ஸஸதுர் ரிஸாலா.

மன்சூர் எம்.ஏ.எம்., *(2014)*, பெண்ணின் சமூக வாழ்வும் உடையும், அக்குரணை, அல்குர்ஆன் திறந்த கல்லூரி.